பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 11 சனிக்கிழமை 23.04.2022 கதிர் 63

## வாழைச்சேனையில் இரு பெண்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை – பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் கேரள கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள்களுடன் இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வாழைச்சேனை பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குழு, நேற்று குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனையிட்ட

2

## கோட்டாபய அரசுக்கு எதிராக போராட்டம் நடத்த சு.க. முடிவு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி மே முதலாம் திகதி, தொகுதி மட்டத்தில் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி

2

## பிரதமர் பதவிக்கு தினேஷின் பெயர் பரிந்துரை

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகினால், அப்பதவிக்கு தினேஷ் குணவர்தனவை நியமிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, தினேஷ் குணவர்தன புதிய பிரதமராகப் பதவியேற்றால் அவருக்கு வேறு எந்த அமைச்சுப்

2



## மஹிந்த எங்கே?

### அவரே விளக்கம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திடீர் சுகயீனம் காரணமாக தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வெளியாகி வரும் தகவல் குறித்து பிரதமரே விளக்கமளித்துள்ளார்.

- தனக்கு சுகயீனம் ஏற்பட்டு மருத்துவமனையில்

2

### கோட்டா மீதான கோபத்தால்

# அரசைக் கூண்டோடு கவிழ்க்க முயலாதீர்!

### நிதி அமைச்சர் சப்றி வேண்டுகோள்

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பிரச்சினைகள் இருக்கலாம், கோபங்கள் இருக்கலாம். அதற்காக அவர் தலைமையிலான அரசைக் கூண்டோடு கவிழ்க்க முயற்சிக்க வேண்டாம்.**

**- இவ்வாறு நிதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.**

2



## அரவிந்குமாருக்கு செருப்பு மாலை!



கோட்டாபய அரசுக்கு ஆதரவு தெரிவித்து, இராஜாங்க அமைச்சு பதவியைப் பெற்றுக்கொண்ட அ.அரவிந்குமாருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதுளையில் நகரில் இன்று போராட்டம்

2



## சுயாதீன எம்.பிக்களுடன் சீனத் தூதர் அவசர பேச்சு

நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் உறுப்பினர்களில் 7 பேருடன் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷி சென்ஹொங் அவசர சந்திப்பு நடத்தியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய முறையை குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது எனக்

2

## போராட்டக் களத்தில் மஹிந்த தேசப்பிரிய

காலிமுகத்திடலில் அமைந்துள்ள கோட்டா கோ கம கிராமத்துக்கு நேற்று வருகை தந்து போராட்டக் களத்தில் நிறைந்திருக்கின்ற இளைஞர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தார் முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

அரசு பதவி விலகிச் செல்ல வேண்டும் என்ற

2



## குடும்பஸ்தர் கொடூரமாக படுகொலை!

குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலை மாவட்டம், ஹெம்மாதகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

2

## அரசுக்கு எதிராக முல்லையில் பொங்கியெழுந்த மக்கள் படை



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கோட்டாபய அரசைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியும் முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி இன்று முன்னெடுக்கப்பட்டது.

முள்ளியவளை கொமர்ஷல் வங்கிக்கு அருகில் இருந்து ஆரம்பமான கவனவீர்ப்புப் பேரணி தண்ணீரூற்று

2

## தடுமாறும் அரசே பதவி விலகு; மக்கள் வயிற்றில் அடிக்காதே!

### யாழ். நகரில் சுவரொட்டிகள்



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கண்டித்து அரசைப் பதவி விலகுமாறு கோரி தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையால் யாழ். நகரப் பகுதியில் ஆங்காங்கே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தடுமாறும் அரசே பதவி விலகு, மக்கள் வயிற்றில் அடிக்காதே எனும் வாசகங்கள்

2

## ஆர்ப்பாட்டங்களில் துப்பாக்கிச்சூடு நடத்த ஆலோசனை வழங்கவில்லை



### பொலிஸ்மா அதிபர் சாட்சியம்

பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களில் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்குத் தாம் ஆலோசனை வழங்கவில்லை என்று பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளார் என ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்தார்.

2

## போராட்டக் களத்தில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இளைஞர்களின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் இதன்போது தெரிவித்தார்.

கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை காலிமுகத்திடலில் ஒன்றுகூடிய இளைஞர்களும், யுவதிகளும் தொடர்ச்சியாக இன்று 15 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாக தற்போது நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்களும் கோஷங்களும் ஓங்கி வருகின்றன.

இந்நிலையில் கலைஞர்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், தொழிற்சங்கவாதிகள், மதத்தலைவர்கள் எனப் பல தரப்பினரும் வருகை தந்து தமது ஆதரவை வெளிப்படுத்தி அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

## சுயாதீன எம்.பிக்களுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீனத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, அத்துரலிய ரத்ன தேரர், தயாசிறி ஜயசேகர, வாசுதேவ நாணயக்கார, அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட ஏழு பேர் பங்கேற்றுள்ளனர்.

இதேநேரம், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தத் தொடர்ந்தும் சீனா தமது உதவிகளை வழங்கும் என அந்த நாட்டுப் பிரதமர் லீ குயாங்க் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## அரசுக்கு எதிராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகரத்தைச் சென்று நிறைவடைந்தது.

இதில் அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்பினர், வர்த்தக சங்கத்தினர், ஓட்டோ சாரதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## குடும்பஸ்தர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெம்மாதகம, தும்புலுவாவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## ஆர்ப்பாட்டங்களில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரம்புக்கனையில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்காகப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே, ரம்புக்கனையில் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சி.டபிள்யூ.சி. தர்மரத்ன மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்னவால் ஆலோசனை வழங்கப்பட்டது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## தடுமாறும் அரசே பதவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடங்கிய சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையப் பகுதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

இந்நிலையிலேயே முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் காலிமுகத்திடலுக்கு நேற்று வருகை தந்து இளைஞர்களுக்கு உற்சாகமூட்டி அரசுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

## மஹிந்த ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்க்கப்பட்டுள்ளதாக வெளியாகிவரும் செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நேற்றிரவு முதல் சமூக வலைத்தளங்களில் பிரதமரின் உடல்நிலை தொடர்பான செய்திகள் வெளியாகி வந்த நிலையிலேயே தற்போது பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

## அரசைக் கவிழ்க்க கூண்டோடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாம் மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றோம். இந்தத் தருணத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிகழ்நிலை ஊடாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நாங்கள் பயணிக்கும் கப்பல் திடீரென நடுக்கடலில் வைத்து புயலில் மாட்டிக்கொண்டுள்ளது. நீங்கள் அந்தக் கப்பலின் கப்டனுடன் கோபம் என்றால் உடனே அந்தக் கப்பலை மூழ்கடிப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். அவ்வாறு செய்தால் நாமும் நீரில் மூழ்கி இறந்துவிடுவோம். கப்பலில் பயணிக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து மெதுவாக அந்தக் கப்பலைப் பாதுகாப்பாக கரைக்குக் கொண்டுவர வேண்டும். அதன் பிறகே கப்டனுடனான பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

இது போலவே தற்போது நமது நாட்டிலும் பிரச்சினை உருவெடுத்துள்ளது. ஜனாதிபதியுடன் பிரச்சினைகள் இருக்கலாம், கோபங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றைக் காட்ட வேண்டிய நேரம் இதுவல்ல, இது பழிவாங்கும் நேரம் இல்லை. இப்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நமது நாட்டை மீட்டெடுக்கப் போராடுவோம் - என்றார்.

## அரவிந்குமாருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்கப்பட்டது.

அவரின் உருவப்படத்துக்கு செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு, எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

## கோட்டாபய அரசுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைப்பாளர்கள் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு, அவர்களுக்கு இது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை மே தின நிகழ்வுகளை நடத்துவதில்லை என்றும், அதற்கு பதிலாக அரசை இராஜிநாமா செய்யும்படி வலியுறுத்தி நாடு முழுவதும் தொகுதி மட்டத்தில் போராட்டங்களை நடத்தவும் சுதந்திரக் கட்சி முடிவெடுத்துள்ளது.

## பிரதமர் பதவிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவியையும் வழங்காதிருக்கவும் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன எனவும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஆளுங்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராகவும் சபை முதல்வராகவும் தினேஷ் குணவர்தன செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது, 31 வயதுடைய பெண் ஒருவர் 23 கிராம் கேரளா கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, குறித்த பகுதியிலுள்ள மற்றுமொரு வீட்டை சோதனைக்கு உட்படுத்தியபோது, ஐஸ் ரக போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உருப்படாத நாடு

'தனக்குத் தனக்கு என வந்தால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள். அந்த மாதிரி இருக்கின்றது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நாடாளுமன்ற உரை.

"ரம்புக்கனையில் நேரடியாக ஒருவரை அரசாங்கம் கொன்றது. ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் இந்த அரசாங்கத்தில்தான் உள்ளார்கள். இது கொலைகார அரசாங்கம்" என அவர் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.

அவர் கூறுவது முற்றிலும் உண்மைதான். அதில் மறுப்பதற்கில்லை. ஆனால் அதனைவிட மோசமான சில உண்மைகளை மூடிமறைத்து, அவற்றைத் தெரியாதவர் போல அவர் பாசாங்கு காட்டிப் பேசுவதுதான் முழு தப்பு.

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மூடும் எத்தனம் அவருடையது. அதற்கு அவரது பௌத்த, சிங்களப் பேரினவாத இயல்பு அடிமனதில் ஊறியிருக்கின்றமைதான் காரணம். அதுதான் கவனிக்கப்பட வேண்டியது.

ரம்புக்கனை சூட்டுச் சம்பவத்துக்கும், ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரிகளைப் பாதுகாப்பதற்கும் இந்த அரசு பொறுப்பு என்பதை தாண்டியும் பெரிய – மிக மோசமான – வேறு பல குற்றச்சாட்டுக்கள் இந்த ஆட்சிப் பீடத்துக்கும் ஆட்சித் தலைவருக்கும் எதிராகத் தாராளமாகவே உள்ளன.

யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் என அப்பாவி மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டமைக்கான குரூரக் குற்றம் இந்த அரசின் மீது அப்படியே மூடி, கவிழ்ந்து கிடக்கின்றது.

இது கொலைகார அரசாங்கம் என்பதை உறுதிப்படுத்தும் பிரதான குற்றப்பட்டோலை அதுதான். ஆனால் அது குறித்துப் பேச இந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு திராணியும் இல்லை. அதற்கான யோக்கியதையும் கிடையாது.

தமிழினத்துக்கு எதிராகத் தான் புரிந்து அந்தக் கொலைவெறித் தாண்டவத்தை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் பெரு வெற்றியாக காட்டி அந்தக் கொலைத் தாண்டவச் சிறப்பில் செல்வாக்கு ஈட்டியே இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தது. அந்தக் கொலைகாரச் செல்வாக்கை வெளிப்படையாக விமர்சிக்க இந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு முதுகெலும்பு கிடையாது.

ஆனாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவருக்குத்தான் மேற்படி கொடூரத்தினால் மனிதப் பேரவலத்தைச் சந்தித்த தமிழர்களாகிய நாம் வாக்குகளை அள்ளிப் போட்டோம்.

எங்கள் வாக்குகளை துடைத்தள்ளிய சஜித் பிரேமதாஸவுக்கு எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் ஒரு வரி தன்னும் சேர்த்துப் பேசும் மன நீதி – நெஞ்சுரம் – இல்லை.

ரம்புக்கனை உயிரிழப்பு குறித்தும், ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் பற்றியும் குறிப்பிட்டு அதற்காக இந்த அரசை கொலைகாரப் பாதக அரசு என்று விமர்சிக்கும் சஜித் பிரேமதாஸவினால் இந்த இரண்டையும் போல பல்லாயிரம் மடங்கு கொடூரங்களை இந்த ஆட்சிபீடம் தமிழர்கள் மீது ஏவி விட்டு அவர்களைக் கொன்றொழித்தது என்று உண்மையைக் கூற முடியவில்லை.

அப்படி உண்மைகளைக் கூறினால் அது எங்கே பௌத்த, சிங்கள தீவிரவாத போக்குக் கொண்ட பேரினவாதிகளைச் சீற்றப்படுத்தி விடுமோ, அதனால் அவர்களின் வாக்குகளை – ஆதரவை – இழந்து விடுவோமோ என்ற கவலை சஜித்துக்கு.

பேரினவாதச் சிந்தனை என்ற இருட்டு அறைக்குள் சிங்களத் தலைவர்கள் சிக்கியிருக்கும் வரை, நீதி, நியாயம், சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட உயரிய சமுதாயத்தை நமது நாட்டில் படைப்பது சாத்தியமே அற்றது.

பேரினவாதத்துக்கு அஞ்சி உண்மைகளை வெளிப்படையாகப் பேசாது வாலைச் சுருட்டும் சஜித் பிரேமதாஸ போன்ற தலைவர்கள் இருக்கும் வரை இந்த நாடு உருப்பட போவதில்லை என்பதும் உண்மை.

# பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமிக்காது சிங்கப்பூர் சென்றார் அப்போதைய ஜனாதிபதி

## மைத்திரியாரை போட்டுத் தாக்கும் எரான்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடந்த போது, அன்றைய ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்தார் எனவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவை பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்காமல் அவர் வெளிநாடு சென்றார் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் நடந்த பின்னர், தான் முன்னாள் பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சுக்கு சென்ற போது, ருவான் விஜேவர்தன இதனைக் கூறினார் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் நடந்தவுடன் நான் அலரி மாளிகைக்குச் சென்றேன். பாதுகாப்பு படைகளில் பிரதானிகளுக்கு இங்கு வர வேண்டாம் எனக் கூறப்பட்டுள்ளதாக அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறினார்.

இதனால், நாம் பாதுகாப்பு அமைச்சுக்கு செல்வோம் என்று அவர் சொன்னார். இதனடிப்படையில் நாங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு சென்றோம். அங்கு சென்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரான ருவான் விஜேவர்தனவிடம் நீங்களா பாதுகாப்பு அமைச்சர் என நான் கேட்டேன்.

ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ளார். என்னை பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கவோ, பதவிப் பிரமாணம் செய்து வைக்கவோ இல்லை என ருவான் விஜேவர்தன கூறினார்.

நேற்றும் இந்த கேள்வியை தானே கேட்டனர். அலி சப்றி வொஷிங்டன் சென்றுள்ளார். பதில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் என கேள்வி எழுப்பப்பட்டது. எவரும் பதில் நிதியமைச்சராக நியமிக்கப்படவில்லை.

இதேபோன்றே ருவான் விஜேவர்தனவுக்கு அன்று பொறுப்பை வழங்காது மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூர் சென்றிருந்தார்.

இதன் பின்னர் நாங்கள் பாதுகாப்பு சபைக்கு சென்றோம். நானும் சென்றேன். ஜனாதிபதிகள் முகங்களை பார்த்து தாம் விரும்பியவர்களை அங்கு அழைப்பது பற்றி அறிந்து கொண்டோம். – எனவும் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

# அரசின் செயற்பாடு கேலிக்கூத்தானது!

## விமர்சிக்கிறார் செந்தில் தொண்டமான்



முகக்கவசம் அணியும் விடயத்தில் அரசாங்கத்தின் திடீர் தீர்மானங்கள் போராட்டங்களை குறுக்கு வழியில் ஒடுக்குவதற்காக முன்னெடுக்கப்படும் முதிர்ச்சியற்ற செயல்பாடு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

உலகில் பல்வேறு நாடுகளில் முகக்கவசம் கட்டாயம் ஆக்கப்பட்டே உள்ளது. சீனா உட்பட பல நாடுகளில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் சூழலில் அரசாங்கம் முகக்கவசம் அணியும் விடயத்தில் வேடிக்கையான தீர்மானங்களை எடுத்துவருகிறது.

முகக்கவசம் அணிவது கட்டாயமில்லையென அறிவித்த அரசாங்கம் மீண்டும் வியாழக்கிழமை முதல் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அறிவிப்புகள் வெளியிட இரண்டு காரணங்கள் தான் உள்ளன. மீண்டும் நாட்டில் கொரோனாத் தொற்றை அதிகரித்து நாட்டை முடக்குவதற்கும் மற்றொன்று போராட்டக்காரர்களை அடையாளம்கண்டு ஒடுக்குவதற்காகவும்.

கொரோனாத் தொற்றுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு ஒருவருடத்தின் பின்னர் மீண்டும் தடுப்பூசியை செலுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது.

தற்போதைய சூழலில் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய அரசாங்கத்துக்கு டொலர் இல்லை. அதேபோன்று அத்தியாவசியமருந்துகளைக்கூடஅரசாங்கத்தால் கொள்வனவு செய்யமுடியாதுள்ளது.

இவ்வாறு மருந்துகள், ஊசிகள் ,அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு டொலர் இல்லாத பிரச்சினைகள் இருக்கும் பொழுது முகக்கவசம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதானது, எதற்கு முன்னுரிமை வழங்குவது என்பது அரசாங்கத்துக்கு புரியவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காது அரசாங்கம் குறுக்குவழியில் இவ்வாறு செயற்படுவது தற்போதைய சூழ்நிலையை அரசாங்கம் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என்பதை இவர்களின் நடவடிக்கை வெளிப்படுத்துகிறது. – என்றார்.

# கட்டாரில் சிறைவாசம் அனுபவித்த 20 இலங்கையர்களுக்கு விடுதலை


*கட்டார் நாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த 20 இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.*

*புனித ரமழானை முன்னிட்டு சிறைவாசம் அனுபவித்த 20 இலங்கையர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இதேவேளை, அபராதத் தொகை செலுத்தலில் இருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





போர் நிலவி வரும் நிலையில்

## உக்ரைன் செல்கின்றார் ஐ.நா. பொதுச்செயலாளர்

உக்ரைன் - ரஷ்யா இடையே போர் நிலவி வரும் நிலையில் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் வரும் 28ஆம் திகதி உக்ரைன் செல்ல வுள்ளார். உக்ரைன் தலைநகர் கீவ்வில் அதிபர் விளாடிமிர் செலன்ஸ்கியை ஆன்டனியோ குட்டரெஸ் சந்திக்கவுள்ளார். ரஷ்யாவில் அடுத்த வாரம் அதிபர் புடினை சந்தித்த பிறகு ஆன்டனியோ குட்டரெஸ் உக்ரைன் செல்லவிருக்கிறார் என தெரிவிக்கப்படுகிறது.

புச்சா படுகொலை விவகாரம்;

## கண்ணீர் சிந்தினார் செய்தி வாசிப்பாளர்



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. இந்தப் போரினால் இரு தரப்பிலும் பெரும ளவில் உயிரிழப்பு மற்றும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடங்கியது. அந்தப் போர் தற்போது வரை தொடர்ந்து வருகிறது.

உக்ரைன் தலைநகர் கீவ் அருகே உள்ள புச்சா நகரில் மனித உரிமை மீறல் நடைபெறுவதாகவும், குடிமக்கள் பலர் கொல்லப்படுகின்றனர் எனவும் செய்தி வெளியானது.

இதற்கிடையே, உக்ரைனில் உள்ள புச்சா பகுதியின் மீது தாக்குதல் நடத்திய வீரர்களை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் பாராட்டி, கௌரவப் படுத்தினார்.

இது தொடர்பான செய்தி ஜப்பானைச் சேர்ந்த ஒரு செய்தி நிறுவனத்தில் ஒளிபரப்பானது.

இந்நிலையில், புச்சா படுகொலை குறித்த செய்தியை வாசித்த செய்தி வாசிப்பாளர் யூமிகோ மட்சுவோ, நேரலையிலேயே கண்ணீர் விட்டு அழுதார். சிலநொடிகளில் சகஜ நிலைக்கு வந்த அவர், அதன்பின் செய்தி வாசிப்பை தொடர்ந்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது.



தீவிர கொரோனா நோயாளிகளுக்கு வழங்குவதற்காக

# பைஸர் நிறுவனம் தயாரித்த மாத்திரைக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி

தீவிர கொரோனா நோயாளிகளுக்கு வழங்குவதற்காக பைஸர் நிறுவனம் தயாரித்த மாத்திரைக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி அளித்துள்ளது. சீனாவின் வுகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 226 நாடுகள், பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றமடைந்து பாதிப்பு அதிகரித்து வருகிறது. கொரோனாவின் 3ஆவது அலை இறுதிக்கட்டத்தில் இருந்த நிலையில், தற்போது மீண்டும் தொற்று மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தீவிர கொரோனா நோயாளிகளுக்கு வழங்குவதற்காக பைஸர் நிறுவனம் தயாரித்த மாத்திரைக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி அளித்துள்ளது.




பாக்ஸ்லோவிட் என்ற இந்த மாத்திரையை தீவிர கொரோனா தொற்று உள்ளவர்கள், தடுப்பூசி செலுத்தாதவர்கள், வயதானவர்கள் ஆகியோருக்கு இந்த மருந்தை பயன்படுத்தலாம். பாக்ஸ்லோவிட் மாத்திரை என்பது 2 நிர்மாட்ரெல்விர், ஒரு ரிடோனாவிர் மாத்திரையாகும். இந்த மாத்திரையை 5 நாள்களுக்கு காலை, மாலை இருவேளையும் தொடர்ந்து சாப்பிட வேண்டும். 5 நாள்களுக்கு மேல் மருத்துவரின் ஆலோசனையில்லாமல் எடுக்கக் கூடாது. இந்த பாக்ஸ்லோவிட் மாத்திரையில் நிர்மாட்ரெல்விர், ரிடோனாவிர் ஆகிய மருந்துகள் உள்ளன. இதில் நிர்மாட்ரெல்விர் மருந்து கொரோனா வைரஸ் தனது புரதத்தை பிரதி எடுக்கவிடாமல் தடுக்கும். நிர்மாட்ரெல்விர் மாத்திரை புரதத்தைத் தடுத்து நிறுத்தியதை நீண்ட நாள்களுக்குச் செயல்பட வைக்கும்.

கொரோனாவால் அதிக ஆபத்துள்ள நபர்கள் மாத்திரையை உட்கொண்டதைத் தொடர்ந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஆபத்து 85% குறைக்கப்படுகிறது.

பைஸர் மற்றும் மருந்துகளின் காப்புரிமை குழுவிற்கு இடையேயான உரிம ஒப்பந்தம், மருந்தின் பொதுவான உற்பத்தியிலிருந்து பயனடையக்கூடிய நாடுகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துகிறது. எனவே, விலை நிர்ணயம் மற்றும் ஒப்பந்தங்களை மிகவும் வெளிப்படையானதாக பைஸர் நிறுவனம் மாற்ற வேண்டும் மற்றும் மருந்து காப்புரிமைக் குழுவுடன் அதன் உரிமத்தின் புவியியல் நோக்கத்தை பெரிதாக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது. இதனால் அதிகமான பொதுவான உற்பத்தியாளர்கள் மருந்தை உற்பத்தி செய்ய தொடங்கலாம் மற்றும் மலிவு விலையில் விரைவாக கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# உக்ரைன் தாக்குதலில் சேதமான போர்க்கப்பல் 27 பேரைக் காணவில்லை என ரஷ்யா தகவல்

ரஷ்யாவின் மோஸ்க்வா போர்க்கப்பல் மீது உக்ரைன் ராணுவம் நடத்திய ஏவுகணை தாக்குதலால் பெரும் சேதம் ஏற்பட்டது.



உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் இன்று 59ஆவது நாளை எட்டியுள்ளது. இந்தப் போரில் கருங்கடலில் இருந்து உக்ரைன் மீது கடல்வழி தாக்குதலை தலைமை தாங்கி நடத்தியது மோஸ்க்வா என்ற போர்க் கப்பல் ஆகும். இந்தக் கப்பல் முந்தைய சோவியத் யூனியன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இது 620 அடி நீளமும், 12 ஆயிரத்து 500 தொன் எடையும் கொண்டதாகும். இதில் 500க்கு மேற்பட்ட சிப்பந்திகள் இருந்தனர். இதற்கிடையே, கடந்த வாரம் இந்த கப்பல் தீப்பற்றி வெடித்து பெருத்த சேதமடைந்தது. கப்பலில் இருந்த சிப்பந்திகள் பத்திரமாக வெளியேற்றப்பட்டு விட்டனர் என ரஷ்யா தெரிவித்தது. கப்பலில் இருந்த வெடிபொருள்கள் காரணமாக வெடித்ததாகவும் தெரிவித்தது.

ஆனால் , பாம்புத் தீவில் இருந்து தங்கள் நாட்டு எல்லைப் பாதுகாப்பு படைவீரர்கள் 2 நெப்டியூன் ஏவுகணைகளை ஏவி மோஸ்க்வா கப்பல் தாக்கப்பட்டதாக உக்ரைன் கூறியது. இந்தக் கப்பலை மூழ்கடித்து விட்டதாக உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கியின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஒரு வாரத்திற்கு பிறகு உக்ரைன் தாக்குதலில் மோஸ்க்வா கப்பல் தீப்பற்றி சேதமடைந்தது என ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக ரஷ்யா பாதுகாப்பு துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், மோஸ்க்வா போர்க்கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். மேலும் 27 பேரைக் காணவில்லை. 396 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் பெருத்த சேதம் அடைந்திருப்பது ரஷ்யாவுக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.


# ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்பு 33 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் வெளியேறியமையை தொடர்ந்து, தலிபான்கள் தங்களது ஆதிக்கத்தை செலுத்தும் விதமாக தாக்குதல் நடத்தி பெரும்பாலான மாகாணங்களை தங்கள் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் வடக்கு குண்டுஸ் மாகாணத்தின் இமாம் சாஹிப் மாவட்டத்தில் உள்ள மவுலவி செகந்தர் மசூதியில் நடந்த குண்டு வெடிப்பில் 33 பேர் கொல்லப்பட்டனர் எனவும், பலர் காயமடைந்தனர் எனவும் தகவல் வெளியானது. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு எந்தக் குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய முதலீடுகளை இந்தியா வரவேற்கிறது பொரிஸ் ஜோன்சனுடனான சந்திப்பில் மோடி தெரிவிப்பு



இரண்டுநாள் அரசுமுறைப்பயணமாக பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் நேற்று முன்தினம் இந்தியாவுக்கு வந்திருந்தார். அவர் இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியிருந்தார். இந்தப் பேச்சில் இருநாட்டு முக்கிய உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். இந்தப்பேச்சுக்களின் பின்னர், மோடி – பொரிஸ் ஜோன்சன் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

இங்கிலாந்து முதலீடுகளை இந்தியா வரவேற்கிறது. இங்கிலாந்து – இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த பொரிஸ் ஜோன்சன் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார், என மோடி கூறினார். என் கையில் இந்தியன் கொவிட்19 தடுப்பூசி செலுத்தப்பட்டது. அது எனக்கு நன்றாக உதவியது. இந்தியாவுக்கு மிக்க நன்றி. இன்று நாங்கள் அற்புதமான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். அத்துடன் எல்லா வகையிலும் எங்கள் உறவைப் பலப்படுத்தியுள்ளோம். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான கூட்டாண்மை நமது காலத்தின் வரையறுக்கும் நட்புகளில் ஒன்றாகும். உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்து இருவரும் விவாதித்தோம்.

உக்ரைனில் உடனடிப் போர்நிறுத்தத்துக்கும் போருக்கான பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சுகளை நடத்தவும் வலியுறுத்தினோம்.

சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான நவீன தொழில் நுட்பத்தை இந்தியாவுக்கு நாம் வழங்க தயாராக உள்ளோம். பாதுகாப்புத்துறையில் இந்தியாவுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க விரைந்து ஒப்புதல் வழங்கப்படும். இந்தியா – இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தேவை, என பொரிஸ் ஜோன்சன் தெரிவித்திருக்கிறார்.

## முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் தொற்றுப் பரவலால் தமிழக அரசு அறிவிப்பு



தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாக கொரோனாத் தொற்று குறைந்து வந்த நிலையில், தற்போது மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. சென்னை ஐ.ஐ.டியில் கடந்த 3 நாள்களில் 30 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த தகவல்களைத் தொடர்ந்து தமிழக சுகாதாரத்துறை செயலர் ராதாகிருஷ்ணன் மக்கள் மீண்டும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களுக்கு 500 ரூபா அபராதம் விதிக்க வேண்டும் எனவும் மாவட்ட நிர்வாகங்களுக்கு ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தியுள்ளார். மேலும் கொரோனா தடுப்பூசிகளை மக்கள் தவறாமல் செலுத்திக்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவில் பிற மாநிலங்களிலும் தற்போது முகக்கவசம் அணிவது கட்டாயம் என அறிவிக்கப்பட்ட நிலையில், தமிழ் நாட்டிலும் மீண்டும் முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## நவம்பர் முதலாம் திகதி உள்ளாட்சிகள் தினம் சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தொடர்பாக சட்டசபையில் விதி 110 இன் கீழ், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை தாக்கல் செய்து உரையாற்றினார்.

24.4.2022 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு சில அறிவிப்புகளை இந்த மாமன்றத்திற்கு நான் வழங்க விரும்புகிறேன்.

உள்ளாட்சி என்பது மக்களாட்சியினுடைய ஜனநாயகத்தின் ஆணிவேர். அது வலிவுடனும் பொலிவுடனும் இருந்தால் தான், அரசினுடைய நலத் திட்டங்கள் கடைக்கோடி மனிதரையும் சென்றடையும்.

2007 நவம்பர், முதலாம் நாளன்று உள்ளாட்சி தினமாகக் கொண்டாடப்பட்டது. அது, இறுதியாக 2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் கொண்டாடப்பட்டு, அதற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது.

கிராமப்புற மக்களிடையே திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், அரசின் அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்திடவும், மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும், இடையில் நடத்தப் படாமல் போன இந்த நிகழ்வு, மக்கள் இயக்கமாக மீண்டும் நவம்பர் முதலாம் திகதி, உள்ளாட்சிகள் தினமாக கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது, 1998 ஆம் ஆண்டில் முதல் முறையாக, ஆண்டிற்கு 4 முறை, குறிப்பிட்ட நாள்களில் கிராம சபை நடத்தப்பட வேண்டும் என்பதை அரசாணையாக வெளியிட்டார்.

அதனடிப்படையில், கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தாலும், அவ்வப்போது சிறப்பு கிராமசபைக்கூட்டங்களும் தேவையின் அடிப்படையில் மிகக் குறுகிய கால அறிவிப்புகள் மூலம் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு குறுகிய கால அறிவிப்புகள் மூலம் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப் படும்போது, மக்களின் பங்கேற்பு குறைவாக இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

எனவே, இதைக் கருத்திற்கொண்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்த வேண்டிய கிராம சபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மக்களின் பங்கேற்பினை உறுதி செய்வது அவசியம் எனக் கருதி, இந்த ஆண்டு முதல் ஆண்டிற்கு 6 கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன், என்று தனது உரையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.




## கொரோனா எக்ஸ்–இ திரிவுத் தொற்று கேரளாவில் அடையாளம் காணப்பட்டது

கொரோனாதொற்றின் எக்ஸ் -இ திரிவு இந்தியாவில் கேரள மாநிலத்தில் தான் முதன்முதலில் கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவில் மருத்துவக் கல்வி கற்கச் சென்ற கேரள மாணவிகள், அங்கு கொரோனா பரவத் தொடங்கியதும் ஊர் திரும்பினர். அவர்களில் ஒருவருக்கு கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டது.

பின்னர் அந்தப் பாதிப்பு அதிகரித்து இந்தியா முழுவதும் பரவியது. அனைத்து மாநிலங் களிலும் கொரோனா அலை வீசி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தற்போது கொரோனா பரவல் கட்டுப்படுத்தப் பட்டு வந்த நிலையில் இதன் நான்காம் அலை பரவி வருவதாக உலக நாடுகள் தகவல் வெளியிட்டுள்ளன.

கொரோனா எக்ஸ் இ எனப்படும் இந்த வகைத் தொற்று தற்போது சீனாவில் பரவி வருவதாக அந்த நாட்டு அரசு கூறியுள்ளது.

இதன் பரவலைக் கட்டுப்படுத்த அங்கு மீண்டும் கொரோனாக் கட்டுப்பாடுகள் அமல் படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவிலும் இந்தத் தொற்று பரவிடாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்தியாவில் முதன்முதலாக கேரள மாநிலத்தில் கொல்லம் மாவட்டத்தை சேர்ந்த 21 வயது வாலிபர் ஒருவருக்கு எக்ஸ் இ வகைக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப் பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது.

சுகாதாரத்துறை அதிகாரிகள் அவரது இரத்த மாதிரிகளை சேகரித்து ராஜீவ்காந்தி பகுப்பாய்வு மையத்திற்கு அனுப்பி வைத்தபோது அந்த வாலிபருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரிய வந்தது.

இந்த தொற்று கொரோனா எக்ஸ் இ வகையைச் சேர்ந்ததாக இருக்கலாம் என கேரள சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். இதனை சுகாதாரத் துறையின் உயர் அதிகாரி ஒருவரும் உறுதி செய்தார்.

நோய்ப் பாதிப்புக்கு உள்ளான வாலிபரின் பயண விவரம், அவர் யார், யாருடன் தொடர்பில் இருந்தார் என்பன போன்ற தகவல்களை சுகாதாரத் துறையினர் திரட்டி வருகிறார்கள்.

கேரளாவில் கொரோனா எக்ஸ் இ பரவலைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்காக கொல்லம் பகுதியில் வீடு வீடாகச் சென்று காய்ச்சல், சளி பரிசோதனைகளை மேற்கொள்ளவும் சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர்கள் 60 பேரில் மேலும் ஐவருக்கு நேற்றுப் பிணை அனுமதி!




உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட – சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தமை தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 60 பேரில் 5 பேர் நேற்று பிணையில்செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

ஏனையவர்களைத் தொடர்ந்து மே 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர்போல் உத்தரவிட்டார்.

சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும், ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்குப் பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் மற்றும் சஹ்ரானின் சகோதரி, அவரின் கணவர் உட்பட 69 பேரை உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் 4 வெவ்வேறு இலக்கம் கொண்ட வழக்குகளை தாக்கல் செய்தனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், ஆகியோரது வழக்குகள் நீதிவான் நீதிமன்றில் இருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. 5 பேர் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டமையை அடுத்து ஏனைய 60 பேரும் பொலன்னறுவை, அனுராதபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பலத்த பாதுகாப்புடன் சிறைச்சாலையிலிருந்து அழைத்துவரப்பட்ட 9 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இதில் 5 பேரை தலா ஒருவருக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையிலும், மாதாந்தம் 2 ஆம் மற்றும் 3 ஆம் கிழமைகளில் உள்ள ஞாயிற்றுக்கிழமையில் பிற்பகல் 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையெழுத்து இடுமாறு உத்தரவிட்டு பிணையில் விடுவித்தார். இதேவேளை ஏனைய 55 பேரையும் தொடர்ந்து மே மாதம் 4 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொலி மூலம் நீதிவான் உத்தரவிட்டார்.



## பாவற்கொடிச்சேனையில் தொலைக்கல்வி நிலையம்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தில் தொலைக்கல்வி நிலையமொன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலய அதிபர் வீ.புஸ்பாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்து மேற்படி நிலையத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்தப் பாடசாலைக்கான தொலைக்கல்வி நிலையத்தின் தேவை தொடர்பாக பாடசாலை அபிவிருத்திக் குழுவால் எடுத்துரைக்கப்பட்டதற்கமைய 'ஏயு லங்கா' நிறுவனமானது 'குழந்தை நிதியம்' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இவ்வள நிலையத்தை நிர்மாணித்திருந்தது.

இந்நிகழ்வில் மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சுபா சுதாகரன், மண்முனை மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், 'ஏயு லங்கா' நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.தவசீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இப்பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களுக்கு இலுப்பை மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, அவை பாடசாலை வளாகத்தில் நடப்பட்டன. அத்தோடு இவர்களுக்கான வங்கிக் கணக்குகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் மோ.சைக்கிள் – ஓட்டோ மோதி விபத்து; நால்வருக்குப் படுகாயம்







திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருஞானசம்பந்தர் வீதியில் நேற்றுப் பிற்பகல் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 4 பேர் பலத்த காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ வந்த பாதையில் இருந்து வலப்புறப்பக்கமாக திரும்புவதற்காக திருப்பப்பட்ட போது அதி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதியமை சி.சி.டி.வி. காணொலி மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கோட்டைமுனையில் வியாழன் வடிகான் துப்புரவு நடவடிக்கை

கோட்டைமுனை மகா மாரியம்மன் ஆலயத்தின் அருகில் உள்ள பிரதான வடிகான் அகலமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மையில் பெய்த அடைமழை வெள்ள நீர் சீராக ஓடி லேடிமெனிங் வாவியைச் சென்றடைந்தது.

நீரோட்டத்தின் காரணமாக பிளாஸ்டிக் கழிவுகள், மரக்கட்டைகள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகள் பிரதான தாம்போதிகளை அடைத்து நீரோட்டம் தடைப்பட்டிருந்தது.

மட்டக்களப்பில் தற்போது டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளதனால் அவற்றைத் தடுக்கும் நோக்கோடு இந்த வடிகானில் அடைக்கப்பட்டிருந்த நீர் சார் கழிவுகள் நேற்று முன்தினம் அகற்றப்பட்டன. சுகாதார நிலையின் குழுவின் வட்டார உறுப்பினராகிய சிவம் பாக்கியநாதன் மற்றும் மாநகரசபையின் சுகாதார ஊழியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருடன் வடிகான் மற்றும் தாம்போதிகளை துப்புரவு செய்யும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி முறைமை நீக்கத்துக்கு மக்கள் வாக்கெடுப்பு சாத்தியமன்று!



## சு.க. பொதுச்செயலர் தயாசிறி கருத்து

ஒட்டுமொத்த அரசியல்வாதிகளையும் அடித்து விரட்டும் மனநிலையில் நாட்டு மக்கள் உள்ள போது ஜனாதிபதி முறைமையை நீக்க மக்கள் வாக்கெடுப்பு நடத்துவது சாத்தியமற்றது.

உத்தேச அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் வரைவை அவசர பிரேரணையாகக் கருதி அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர சபையில் வலியுறுத்தினார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படவில்லை. நிலையற்ற அரசாங்கமே நடைமுறையில் உள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது தொடர்பிலான தனிநபர் பிரேரணை நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பல்வேறு கால கட்டங்களில் அரசமைப்பு திருத்தம் ஊடாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி முறைமையில் அதிகாரம் குறைக்கப்பட்டது.

பின்னர் 18 ஆவது திருத்தத்தில் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது. பின்னர் 19ஆவது திருத்தத்தின் அதிகாரம் குறைக்கப்பட்டு அது நிறைவேற்றுத் துறைக்கும், சட்டவாக்கத்துறைக்கும் இடையில் அதிகார ரீதியிலான முரண்பாட்டை தோற்றுவித்தது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தற்போதுமாறுபட்டபலபிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் இருந்ததை விட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியினர் முன்வைத்துள்ள பிரேரணை தொடர்பாக அதிக அவதானம் செலுத்த வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை யுடன் தேர்தல் முறைமை, மாகாண சபைத் தேர்தல் முறைமை ஆகிய இரு பிரதான விடயங்கள் காணப்படுகின்றன.

ஜனாதிபதி முறைமையை நீக்கினால் மாகாண சபைத் தேர்தல் முறைமையையும் ரத்து செய்ய நேரிடும் அவ்வாறாயின் பிளவுபடுத்தப்பட்ட நாடு தோற்றம் பெறுவதற்கும், நிலையற்ற அரசாங்கம் தோற்றம் பெறுவதற்கும் வாய்ப்புண்டு. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஆகவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வது தொடர்பாக மிகவும் நுணுக்கமான முறையில் ஆராய வேண்டும்.


நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.மக்கள் வாக்கெடுப்பைத் தற்போதைய ஜனாதிபதியே அறிவிக்க வேண்டும்.

மக்கள் வாக்கெடுப்பை ஜனாதிபதி நடத்தாவிடின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய முடியாது. தற்போதைய நிலையில் மக்கள் வாக்கெடுப்பை நடத்தவும் முடியாது. வாக்கெடுப்பும் வேண்டாம், 225 உறுப்பினர்களும் வீட்டுக்குச் செல்லுங்கள் என அடித்து விரட்டும் நிலையில் மக்கள் உள்ளார்கள்.

போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் முதல் கோரிக்கை கோ ஹோம் கோடா, இரண்டாவது கோ ஹோம் ராஜபக்ஷர்கள், மூன்றாவது கோ ஹோம் 225 உறுப்பினர்கள் என்பது தற்போது வியாபித்துள்ளது. இவ்வாறான நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வது தற்போது ஏற்புடையதாக அமையாது.

நடப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை தனி நபர் பிரேரணையாக ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றில் முன்வைத்துள்ளார். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை திருத்தங்களுடன் கொண்டு வருவது தொடர்பாக 21ஆவது திருத்தத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. 21ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் விரைவுபடுத்துவது அவசியமானது. அரசாங்கம் இந்தப் பிரேரணையை அவசர யோசனையாகக் கருதி ஏனையதரப்பினரதுயோசனைகளையும் உள்ளிடக்கி அமைச்சரவையில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.19ஆவது திருத்தத்தை செயற்படுத்துமாறு பொது மக்களும், மகாசங்கத்தினரும் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். – என்றார்.

## மலையகத்தில் கடும் மழை போக்குவரத்துகள் பாதிப்பு



நுவரெலியா மாவட்டத்தில் இன்று பெய்யும் கடும் மழை காரணமாக பொதுப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாகக் கடுமையான வரட்சியான காலநிலை நிலவி வந்த நிலையில் வியாழன் மாலை முதல் மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

ஹற்றன் பகுதியில் இன்று பெய்த கடும் மழை காரணமாக ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் ஹற்றன் கொழும்பு பிரதான வீதி நீரில் மூழ்கியுள்ளது.

குறித்த வீதியில் ஓர் அடி வரை மழை நீர் வழிந்தோடியதால் வீதியினூடான போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

மழையுடன் கடும் பனியும் காணப்படுவதால் ஹற்றன் – கொழும்பு, ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனத்தை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நேற்று 2 மணியளவில் கடுமையான மழை பெய்ததன் காரணமாக கால்வாய்கள் நிரம்பி மழைநீர் வீதியில் வழிந்தோடியதால் பாடசாலை விட்டு வீடு செல்லும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிக்கும் வரை மின்வெட்டு

நாட்டில் தற்போது பெய்து வரும் மழையால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகபட்ச கொள்ளளவை எட்டும் வரை மின்சார விநியோகத்தை அவ்வப்போது நிறுத்த வேண்டியிருக்கும் என இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

தற்போது 25 சதவீத மின்சாரம் நீர் மின் நிலையங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படுவதாகவும், மேலும், நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து 900 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் அமைப்பில் சேர்க்கப்படும் எனவும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரான டி.சி.ஆர். அபேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றும் (வெள்ளிக்கிழமை) 3 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்சார விநியோகத்தை இடைநிறுத்துவதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## வவுனியா - மன்னார் வீதியில் விபத்து; இருவர் படுகாயம்



வவுனியா – மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, குருமன்காடு பகுதியில் இருந்து மன்னார் வீதி வழியாக மோட்டார் சைக்கிள் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த போது உக்குளாங்குளம் பகுதியில் இருந்து மாதா சொரூப வீதி ஊடாக மன்னார் வீதிக்கு ஓட்டோ ஒன்று ஏற முற்பட்ட போது இரு வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகி வீதியை விட்டு விலகின.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மற்றும் ஓட்டோச் சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த விபத்து தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2022இல் வெளியிடப்பெற்றது.